


கொளத்தூர் மேற்கு பகுதி, வில்லிவாக்கம் கிழக்கு பகுதி, அம்பத்தூர் தெற்கு பகுதி சார்பாக – நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு – சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர் ஏ.நாகராஜன், வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு, அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி. ஆகியோர் தலைமையில் அந்தந்த பகுதிகளில் நடைபெற்ற சாதனை விளக்க பொதுக்கூட்டங்களில் கொளத்தூர் மேற்கு பகுதியில் தலைமை கழக பேச்சாளர் முரசொலி மூர்த்தி, வில்லிவாக்கம் கிழக்கு பகுதியில் தலைமை கழக பேச்சாளர் கொரஞ்சூர் முனுசாமி, அம்பத்தூர் தெற்கு பகுதியில் தலைமை கழக பேச்சாளர் ஆவடி பாஸ்கர் ஆகியோர் உரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன் சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், மற்றும் பி.கே.மூர்த்தி, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐசிஎப் வ. முரளிதரன் வே.வாசு, கூ.பீ.ஜெயின், எம்.டி.ஆர்.நாகராஜ், தொகுதி பார்வையாளர்கள் ஓ.ஏ.நாகலிங்கம், சன் முனியாண்டி, கே. சந்துரு, சி.மகேஷ் குமார் மற்றும் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (09.05.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் மருத்துவத்துறை திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம். அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள். இணை இயக்குநர்கள், மாவட்ட சுகாதார அலுவலர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலளார் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி மற்றும் மருத்துவத்துறை உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கொளத்தூர், கபாலீசுவரர் கல்லூரியில் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கி தொடங்கி வைத்தார்!

சென்னை, மே.10-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை, கொளத்தூர் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2025-2026 ஆம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை நேற்று (09.05.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு வழங்கி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசியதாவது :

கொளத்தூர் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நான்காம் ஆண்டை நிறைவு செய்து, ஐந்தாம் ஆண்டை தொடங்கியிருக்கும் இந்த வேளையில் வரும் கல்வி யாண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு இன்று முதல் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கொளத்தூரில் அமைந்திருக்கின்ற இந்த கல்லூரியில் தற்போது கல்வி பயின்று வரும் 743 மாணவ, மாணவியருக்கும் இந்த கல்லூரியில் பயின்று TCS உள்ளிட்ட 9 தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெற்றிருக்கின்றவளாக நேர்காணல் மூலம் பணி வாய்ப்பு பெற்றிருக்கின்ற 347 மாணவ, மாணவியருக்கும் கல்வி தந்த கடவுளாக முதலமைச்சர் அவர்கள் விளங்குகின்றார்கள். கடந்தாண்டு இந்த கல்லூரியில் பயில 972 மாணவ, மாணவியர் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் 240 மாணவ, மாணவியருக்கு மட்டுமே இடம் அளிக்க முடிந்தது.

முதலமைச்சர் அவர்கள் கொளத்தூரில் கலைக் கல்லூரி ஏதுமில்லை என்ற நிலையில் ஏழை, எளிய மாணவர்களின் உயர்கல்வி கனவினை நனவாக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டில் இக்கல்லூரியை தொடங்கினார்கள். இந்த கல்லூரி தொடங்குவதற்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்திய போதிலும் அவற்றை சட்டப் போராட்டம் நடத்தி வென்று காட்டியதோடு மட்டுமல்லாமல் பூம்புகார் நகரில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் இக்கல்லூரிக்கு புதிய கடட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டியவர் நமது முதலமைச்சர் அவர்கள். புதிய கல்லூரி கட்டடமானது 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் திறக்கப்பட்டு இன்று விண்ணப்பங்களை பெறும் மாணவ, மாணவியர் அங்கு கல்வி பயிலும் வாய்ப்பினை உருவாக்கி தரவுள்ளோம்.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் நடத்தப்படும் 25 பள்ளிகளில் 10,670 மாணவ, மாணவியரும் 9 கலைக் கல்லூரிகள் மற்றும் ஒரு பாலிடெக்னிக் கல்லூரி உட்பட 10 கல்லூரிகளில் 12,137 மாணவ, மாணவியரும் கல்வி பயின்று வருகின்றனர். ஒவ்வொரு கல்லூரியிலும் பயில்வதற்கு ஆண்டுதோறும் 5,000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வரப்பெறுகின்றன. திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு கடந்த நான்காண்டுகளில் பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூ.60.82 கோடியும், கல்லூரிகளுக்கு ரூ.77.31 கோடியும் என மொத்தம் ரூ.138.19 கோடி மதிப்பீட்டில் வகுப்பறை கட்டடங்கள், ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன.

இந்தாண்டு காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் சார்பில் கீழ்ப்பாக்கத்திலும், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் சார்பில் சமயபுரத்திலும் 2 செவிலியர் கல்லூரிகளும், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரியும், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் சார்பில் கோயில் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியும் தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இந்த கல்லூரிகள் இந்தாண்டிற்குள் தொடங்கப்பட்டு மாணவர்களின் கல்வி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இந்தாண்டு தொடங்கப்படும் கல்லூரிகளையும் சேர்த்து துறையின் சார்பில் 14 கல்லூரிகள், 25 பள்ளிகள் என்ற வரலாற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி காட்டுவார்கள் என்பதை தெரிவித்து கொண்டு, இதுபோன்ற அறபணிகள் தொடரும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு வரும் ஜுன் மாதம் 5ந் தேதி அன்று 3,000 திருக்கோயில்களின் குடமுழுக்கை நிறைவு செய்ய உள்ளோம். கடந்த ஆட்சியின் 10 ஆண்டுகளில் முடங்கி கிடந்த இந்து சமய அறநிலையத்துறையை புத்துணர்வூட்டி திருக்கோயில் திருப்பணிகளையும், அறம் சார்ந்த இதர பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு துறையை மிளிரச் செய்த பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சேரும். துறையின் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு நல்லதொரு சூழலை உருவாக்கி தந்து அவர்கள் உயர்ந்த நிலையை அடையவும், அவர்களின் கனவு நிறைவேறவும் எல்லா வகையிலும் துணை நிற்போம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் திருமதி பெ.க. கவெனிதா, எவர்வின் பள்ளி தாளாளர் பா.புருஷோத்தமன், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி அமுதா, திருமதி சாரதா, திருமதி யோகப்பிரியா மற்றும் ஐ.சி.எப்.முரளிதரன், தனசேகரன், சந்துரு, மகேஷ்குமார், கல்லூரி முதல்வர் திருமதி சி.லலிதா மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.

12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில்

# குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மனநல ஆலோசனை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு!

சென்னை, மே.10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.05.2025) சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள 108 அவசர கால சேவை மையத்தில், 2025 ஆம் ஆண்டு 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்குவதை ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வில் நட்புடன் உங்களோடு என்ற 14416 என்ற இலவச எண்ணை தொடர்பு கொண்டு மனநல ஆலோசனை பெறுவதற்காக அறிமுகப்படுத்தினார்கள்.

பின்னர் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவத்துறையில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டங்களின் ஒன்றாக 202021ஆம் ஆண்டுகளில் நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்கு ஆலோசனைகள் குறிப்பாக மனநல ஆலோசனைகள் வழங்கப்படுவதற்காக 104 என்கின்ற கட்டணமில்லா தொலைபேசி எண் தொடங்கப்பட்ட நாள்முதல் நீட்தேர்வு எழுதிய மாணவர்கள், தேர்வில் தேர்ச்சி பெற தவறிய மாணவர்கள் என்று அவர்களுக்கான மனநல ஆலோசனைகள் ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற தவறிய மாணவர்களுக்கும் மனநல ஆலோசனைகள் வழங்கும் திட்டம் 202122ஆம் ஆண்டுகளில் தொடங்கி வைக்கப்பட்டது. நட்புடன் உங்களோடு எனும் தலைப்பில் தொடங்கப்பட்ட மனநல ஆலோசனை மையம் 24 மணிநேரமும் டிஎம்எஸ் வளாகத்தில் 14416 எனும் எண்ணுடன் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுமட்டுமல்லாது 104 என்கின்ற எண்ணும் இதோடு இணைக்கப்பட்டு, ஒட்டுமொத்தமாக மனநல ஆலோசனைகள் தமிழ்நாட்டில் யாருக்கெல்லாம் மனநல ஆலோசனைகள் வேண்டுமோ என்று அறிவிக்கப்பட்டு அந்தவகையில் இந்த சேவை மையம் மிகச் சிறப்பாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த ஆண்டு தமிழ்நாட்டில் 12ஆம் தேர்வினை பொறுத்தவரை 7,92,494 மாணவர்கள் தேர்வு எழுதி இருந்தார்கள். இதில் 31,352 மாணவர்கள் அதாவது 25,508 ஆண்கள், 13,844 பெண்கள் என 39,352 மாணவர்கள் தேர்ச்சி பெறாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத 39,352 மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனைகள் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கிறது. தேர்வு முடிவுகள் வெளிவந்தவுடன் அந்த பட்டியலை பள்ளிக்கல்வித் துறையில் சம்மந்தபட்ட அலுவலர்கள் கேட்டு பெற்று இன்றைக்கு அந்த மாணவர்களுக்கு தனித்தனியே மனநல ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். மாணவர்களுக்கு வழங்கப்படும் மனநல ஆலோசனைகளைப் பொறுத்தவரை மாணவர்களுடைய மனநிலையை உறுதிப்படுத்துவது, மாணவர்களின் பெற்றோர்கள் ஒரு சிலர் தேர்ச்சி பெற தவறியமைக்காக தங்களது குழந்தைகளை திட்டுவது, அடிப்பது, வெறுப்பது போன்ற செயல்களை தடுத்திட அவர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவது என்று இந்த சேவை தொடர்ந்துக் கொண்டிருக்கிறது. இந்த சேவை 14416, 104 ஆகிய இரண்டு எண்களும் நட்புடன் உங்களோடு மனநல சேவை என்கின்ற வகையில் பணி செய்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மையம் 24 மணி நேரமும் செயல்பாட்டில் உள்ளது, 70 மனநல ஆலோசகர்கள் இதில் பணியாற்றி வருகிறார்கள். 8 மருத்துவ உளவியல் ஆலோசகர்கள் மற்றும் 1 மனநல மருத்துவரைக் கொண்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆலோசனையில் நேற்று மற்றும் இன்று வரை 67 பேர் கடுமையான மன அழுத்தத்தில் உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளனர். இந்த 67 பேருக்கு மீண்டும் மீண்டும் மனநல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் முழுமையாக மன உளச்சலை அகற்றி மனநலன் பெறுகிற வகையில் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன், 108 மாநில செயல்தலைவர் திரு.செல்வக்குமார் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மீ.வே.கர்ணாகரன் ஏற்பாடு! சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்! நலஉதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! தமிழ் சாதிக் - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - ஜெ.அருண் சிறப்புரை!

சென்னை, மே 10

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நாடே போற்றும் நான்காண்டு கழக ஆட்சியின் சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (10.5.2025 - சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில் காரனோடை பஜார் வீதியில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு என்.விஜய், ஜி.ஆர்.பத்மநாபன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

வழுதிகை நா.செல்வ சேகரன், ஏ.காசிம் முகம்மது, இரா.விஜயன், கே.எம். துரைவேல், ப.சீனிவாசன், கி.வீரம்மாள், செ.அரசு, பா.சேகர், பொன்.கோதண்டன், இரா.விஜயன், டி.ரவிதாஸ், வி.பிரேம்குமார், டி.எம்.கிருஷ்ணன், கே. எஸ்.முருகன், ஏ.எஸ்.பாஸ்கர், எம்.பிரபாகரன், எஸ். லோகேந்திரன், எஸ்.தணிகாசலம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப் பொதுக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் தமிழ் சாதிக், கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., மாதவரம் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ஜெ.அருண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாட்டினை சோழவரம் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்.

இக்கூட்டத்தில் மிசா பா.மதிவாணன், வி.இராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி. ராமகிருஷ்ணன், பி.அறிவழகி, எம்.ஆனந்தன், என். பரந்தாமன், ஜெ.ஜெய்மதன், டி.ஏ.ராஜி, இரா.முருகேசன், பி.சாந்தி, எஸ்.நந்தகோபால், புழல் எம்.நாராயணன், ஜி.தயாளன், சி. அற்புதராஜ், ஜி.ராஜேந்திரன், ஐ.ஜான், என்.முகிலன்,

எஸ்.ஏ.சீனிவாசன், ஆர். டி.மதன்குமார், எம்.எம். செந்தில், சன் முனியாண்டி, எம்.கோமலவள்ளி, எம். அம்மு, டி. வெங்கடேசன், து.கோபால், வி. தியாக ராஜன், ஜி.தேவன் நேசன், சுந்தர்ராஜ், கு.தமிழ்மணி, ஆர். டி.குமார், காஞ்சி சு.மதிவாணன், க.காசிநாதன், ரா.உதயராஜ், கே.ரவிக்குமார், ஜே.அப்துல் ஆசன், கே.லட்சுமி காந்தன், மோகனசுந்தரம், சி.கோவிந்தராஜ், சி. ஏழுமலை, பி வி எத்திராஜ் பா சரவணன் மற்றும் சோழவரம் தெற்கு ஒன்றிய ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக எம்.ஜெகன், ஏ.கே.கௌதமன், சுகவேணி, முருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி ஒன்றியம் மாநெல்லூர் முன்னாள் வட்டசெயலாளர் தன. ராஜ்குமார், பாரதி, ஆகியோரின் இல்ல விழாவில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் சி.எச்.சேகர், திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளர் கே.வி.ஜி.உமாசங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பா. செ.குணசேகரன், கே.வெங்கடாசலம், அயலகஅணி துணைச் செயலாளர் கன்னிகை ஸ்டாலின், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. மோகன்பாபு, அயலக அணி மாவட்ட தலைவர் ஜி.மனோகரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஏ.சந்திரமோகன், ஒன்றிய செயலாளர் எம்.மணிபாலன், மற்றும் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ - கே.கண்ணன் எம்.சி - மு.இிராசா முன்னிலையில்

# கலைஞர் நகர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் கழக அரசின் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - அ.சரவணன் - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - க.தனசேகரன் - சென்னை அரங்கநாதன் சிறப்புரை!

சென்னை, மே.10 -

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலைஞர் நகர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நாண்காண்டு தொடரட்டும் பல்லாண்டு, சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் இன்று (10.05.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, மேற்கு ஜாபர் கான்பேட்டை, பிள்ளையார் கோயில் தெரு பகுதியில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். வி.பிரபாகர ராஜா, பகுதிச் செயலாளர்கள் , கே.கண்ணன் மு.இராசா, மாவட்டத் துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரை ராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், ஜம்பு முருகன், பொன் வர. லோகு, பூக்கடை பழனிச்சாமி, இரா.செழியன், பி.கே.குமார், அ.கதிரேசன், வழக்கறிஞர் சதீஷ் கண்ணன், செந்தில்குமார், பழக்கடை எஸ்.பாஸ்கரன், தஞ்சை ஆர்.பாபு, எஸ். மைக்கேல், மு.கோவிந்த ராஜன், வழக்கறிஞர் வி.ஏ. ராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும் பாரிநகர் சசிகுமார், ஈகை கருணாகரன், அஞ்சுகம் நகர் வீரா, கே. சண்முகம், அசோக்குமார், வி.கல்பனா, க.சுரேஷ், கன்னி முருகன், ஆர்.அமுல் ராஜ், வி.மூர்த்தி, ஜி.ரமேஷ், எம்.பாபு, எஸ்.மணிகண்டன், ஸ்டெர்லிங் சுரேஷ், எஸ்.எஸ்.சீனு, என்.எஸ். தென்னரசு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் தணிக்கைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் அ.சரவணன், மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைக் கழகப் பேச்சாளர் சென்னை அரங்கநாதன், தமிழச்சி தங்கபாண்டியன், ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், காசி முத்துமாணிக்கம், எம். கிருஷ்ணமூர்த்தி, தொகுதி பார்வையாளர் உமாகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மேலும் மாமன்ற உறுப்பினர்கள் ரத்னா லோகேஸ்வரன்,

நிலவரசி துரைராஜ், மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார் கனிமொழி தனசேகரன், நிஷா சையத், பகுதிகழக நிர்வாகிகள் எஸ். உமாபதி, அஜந்தா ரவி, தியாகு பாபு, வாட்டர் விஜயகுமார், சா.நாகராஜன், வி.விஜயலட்சுமி, துரை.ரஞ்சித்குமார், ராமமூர்த்தி, சுப. முத்துவேல் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

நிகழ்வில் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் நிளவரசன், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் லட்சுமி, பகுதி பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பாலாஜி, பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் தினேஷ்குமார், வட்ட இளைஞரணி சுவேதன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் தலைமைக் கழக இளம் பேச்சாளர் சந்தோஷ் ஜெய் அனைவரையும் வரவேற்கின்றார்.




சென்னை வடக்கு மாவட்டம் , பெரம்பூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பகுதி செயலாளர் க.ஜெயராமன் தலைமையில் ஆரணி வெ.அன்புவாணன், மாவட்ட பொறுப்பாளர் ஆர் டி சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் கன்னிகை ஜி.ஸ்டாலின், அ.முருகன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர். கமலகண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்செல்வன், டி.கமலகண்ணன், க.அமுல், மு.சாகுல்ஹமீது, எஸ். சாக்ரடிஸ், இரா.ஜோதிமணி, வட்ட செயலாளர்கள் த.ஆறுமுகம், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, க.பாபு, எஸ். அருள், ஜி.மாரிமுத்து, கி.தினகரன், வி.முருகன், கே.வி.ராஜன், நீ.கார்த்தீபன், இரா.அரிதாஸ், கே.ஈ.செந்தமிழரசு, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.